# 29

## இணையத்தில் கற்றல் – இராபிள்ஸ் கல்வி நிலையம்

**வே. ஜெயகுமார் & நா. கல்யாணி**

*இராபிள்ஸ் கல்வி நிலையம். சிங்கப்பூர்*

### முன்னுரை

1819ஆம் ஆண்டு தென்கிழக்கு ஆசியாவின் வரலாற்றில் ஒரு முக்கியமான நாளாகும். பாரெங்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கொடி பட்டொளி வீசிப் பறந்தது போலவே சிங்கப்பூரிலும் பறக்கத் தொடங்கியது. பிரிட்டன் தன் துறைமுக மேம்பாட்டுக்காக உருவாக்கிக் கொண்ட நாடே சிங்கப்பூர்.

கோவிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்பது நம் முன்னோர்கள் கொண்ட கொள்கை. ஆனால் பள்ளியில்லா ஊரில் குடிபுகவேண்டாம் என்பது நாடுகளை உருவாக்கிக் கொண்டிருந்த பிரிட்டனின் கொள்கை. அதனால்தான் 1823ல் சிங்கப்பூரில் ஒரு பள்ளியை அன்றைய அரசாங்கம் உருவாக்கியது. அதாவது நாடு கண்டுபிடிக்கப்பட்ட 4 ஆண்டுகளில் 'இராபிள்ஸ் கல்வி நிலையம்', அதாவது RAFFLES INSTITUTION உருவாக்கப்பட்டது. இன்றைக்கு 180 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இராபிள்ஸ் பள்ளி கல்விப் பணியில் மலை போல் உயர்ந்து நிற்கிறது. இன்று சிங்கப்பூரில் 300க்கு மேற்பட்ட பள்ளிகள் உண்டு. அதில் 150க்கு மேற்பட்ட தொடக்கப் பள்ளிகளும் 100க்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளி களும் 14 தொடக்கக் கல்லூரிகளும் மற்றும் பல தொழில்நுட்பக் கல்லூரிகளும் பலதுறைக் கல்லூரிகளும் 3 பல்கலைக்கழகங்களும் அமைந்துள்ளன.

உயர்நிலைப் பள்ளிகளில் (13 வயது முதல் 16 வயது வரை) இன்று தலைசிறந்து விளங்குகிறது இராபிள்ஸ் கல்வி நிலையம். ஆமாம், எங்கள் நாட்டின் தரவரிசையில் முதல் இடம் பெற்றுள்ளது இப்பள்ளி. இராபிள்ஸ் கல்வி நிலையம், தான் கடந்து வந்த பாதையில் பல சாதனைகளைச் சாதித்துள்ளது. நாட்டுக்குத் தேவையான தலைவர்களையும் நாட்டை வழிநடத்திச் செல்லும் கல்வி மான்களையும் உருவாக்கிய பெருமை இந்தப் பள்ளிக்கு உண்டு. உலகப் புகழ்பெற்ற எங்கள் முன்னாள் பிரதமர் திரு. லீ குவான் யூ, இன்றைய பிரதமர் திரு. கோ சொக் தோங் ஆகிய இரண்டு பிரதமர் களும் கல்வி கற்றது இந்தப் பள்ளியில்தான். தொடக்கப் பள்ளியில் மிகச் சிறப்பாகத் தேறும் முதல் 3% மாணவர்களை மட்டுமே உயர்நிலைக் கல்விக்கு சேர்த்துக்கொள்கிறது இராபிள்ஸ் கல்வி நிலையம்.

### கல்வித் திட்டம்

சிங்கப்பூர் பலவின மக்களைக் கொண்ட நாடு என்பதை உலகம் அறியும். மக்களை ஒருங்குசேர்க்க ஒரு பொது மொழியாக ஆங்கிலம் பள்ளிகளில் முதல் மொழியாக இருப்பதில் வியப்பேதும் இல்லை. ஆனால் அதே வேளையில் ஒவ்வொருவரும் தம் தாய்மொழியைக் கற்று அதிலும் உயர்தன்மை பெற்றிடவேண்டும் என்பதே எங்கள் நாட்டின் மிக முக்கிய கல்விக் கொள்கையாகும். ஆகவே ஆங்கிலம் முதல் மொழியாகவும் தாய்மொழிகள் தொடர்ந்து பல்கலைக்கழகம் வரையிலும் கற்பிக்கப் படுகின்றன.

இக்காரணத்தால் பள்ளிகள் உருவானபோதே தமிழ்மொழியும் கல்வித் திட்டத்தில் கட்டாய மொழியாக சேர்க்கப்பட்டுவிட்டது. ஆகவே இராபிள்ஸ் கல்வி நிலையத்திலும் தமிழ் மொழி உயர்தமிழ் என்ற அடிப்படையில் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

## தமிழ் மொழி

இராபிள்ஸ் கல்வி நிலையத்தில் கற்கும் மாணவர்கள் 4 ஆண்டுகள் கட்டாயமாக தமிழ் கற்றிட வேண்டும். மொழி கற்றலின் அடிப்படை தேவைகளான 4 கூறுகளும் கற்றுக் கொடுக்கப்பட்டு 4ஆம் ஆண்டு இறுதியில் சிங்கப்பூர் கேம்பிரிஜ் தேர்வில் சோதிக்கப்படுகிறது. தமிழ் மொழியைக் கற்றிடும் மாணவர்கள் தமிழில் இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றோடு பண்பாட்டுச் சூழல்களும் கலையும் தலைமைத்துவ பண்புகளும் கற்றுத் தரப்படும்.

மொழி கற்றலை இனிமையுடையதாக ஆக்கிடவேண்டியது இன்றைய சூழலில் அவசியமான ஒன்றாகி விட்டது. மாணவர்கள் அறிவியலையும், கணிதத்தையும் கற்றிடுவது போன்று மொழியையும் எந்த வெறுப்புமின்றிச் சுலபமாகக் கற்றிட முடியாது. அதனால் மொழி கற்பிக்கும் போக்குகளை மாற்றிட பல புதிய முயற்சிகளையும் செய்யவேண்டியதுள்ளது. அதன் ஒரு முக்கிய கூறாக அமைந்ததே கணினிவழி கற்றல் என்ற கோட்பாடு ஆகும். கணினி பல துறைகளுக்கும் பயன்படுவதை நாம் அறிவோம். ஆனால் மொழி ஆசிரியர்கள் அந்தக் கணினிகளைத் தம் மொழி கற்பித்தல் நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தி இலக்கிய, இலக்கணங்களை மாணவர் மனம் விரும்பும்படி செய்யவேண்டியது அவசியம். இதை நன்கு அறிந்த இராபிள்ஸ் பள்ளி ஒரு புதிய திட்டத்தை 1999ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவந்தது. அத்திட்டமே கணினியைப் பயன்படுத்தி இணையத்தில் கற்றல் என்பதாகும்.

## இணையம்

இணையம் இன்று உலகை இணைக்கும் ஈடு இணையற்ற பாலமாக விளங்குகின்றது. பல கோடி கணினிப் பொறிகளின் இணைப்பான இணையத்தின் வழி இன்று நாம் ஒரு இடத்தில் இருந்து கொண்டே எத்தனையோ காரியங்களைச் செய்ய முடியும். செய்ய முடியாத காரியங்களை விட செய்யக் கூடிய காரியங்களே மிக அதிகம். சேவைகள் பல வழங்கும் செயலகமாக இருக்கும் இணையம், பொழுதுபோக்குத் தலமாக, நண்பர்கள் வட்டமாக, அறிவு வளர்க்கும் கலைக் களஞ்சியமாகவும் விளங்குகிறது. அண்மைய கண்டுபிடிப்பான இணையக் கட்டமைப்பு இன்று எல்லாரின் வாழ்விலும் ஊடுருவிவிட்டது. பிடிக்கிறதோ இல்லையோ, தெரிகிறதோ இல்லையோ இணையத்தைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் இன்று உருவாகியிருக்கிறது. இந்த மாபெரும் சக்தியை உரிய வழியில் பயன் படுத்திக்கொண்டால் அது பல வகைகளில் நமக்குப் பயனளிக்கும். இதையுணர்ந்தே தகவல் தொழில் நுட்பத்தின் ஒரு வடிவமான இணையத்தை இராபிள்ஸ் கல்வி நிலையம் கற்றலுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

## இணையத்தில் கற்றல் என்றால் என்ன ?

இணையம் என்பது தகவல்களின் கடலாக விளங்குகிறது என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. அந்தச் கடலில் இருந்து அனைவரும் தகவல்கள் என்ற நீரை இலவசமாக இரைத்துக்கொள்ள முடியும். எத்தனையோ துறைகள் தொடர்பான தகவல்கள் சிறிய கணினித் திரையில் நமக்குத் தெரிகின்றன. குறிப்பாக இன்றைய மாணவர்கள் மிக அதிக அளவில் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். வண்ணத் திரையில் அசையும் அசையா உருவங்களும் கேட்கும் குரல்களும் இசையும் அவர்களை வெகுவாக ஈர்க்கின்றன. எனவே சுயமாகவே இணையப் பக்கங்களைப் புரட்ட அவர்களுக்கு ஆவல் மேலிடுகிறது. இது சுயமாகக் கற்கும் தன்மையை அவர்களிடம் வளர்க்கிறது. யாருடைய தூண்டுதலு மின்றிக் கற்க அவர்கள் தன் முனைப்புடன் இணையத்தை நாடுகின்றனர்.

## நோக்கங்கள்

இணையத்தைப் பயன்படுத்திக் கற்பிக்கும் இராபிள்ஸ் கல்வி நிலையத்திற்குப் பல நோக்கங்கள் இருக்கின்றன.

1. இவ்வாறான அரிய சாதனத்தின் வழி பாடத் திட்டத்துடன் தொடர்புடைய, பள்ளி சார்ந்த, தன்னிச்சையான, புத்தாக்கமான கற்றல், கற்பித்தல் ஆகியவற்றை எளிமையாக நடைமுறைப் படுத்த முடிகின்றது.
2. தகவல் தொழில்நுட்பம் சார்ந்த இணையத்தின் வழி, பல்வேறு வகையான கற்றல் முறைகளைச் செயல்படுத்த முடிகின்றது.
3. இன்று வாழ்க்கையின் ஒரு கூறாகிவிட்ட இணையத்தைத் தகவல் தொழில்நுட்பச் சாதனமாகப் பயன்படுத்திக் கற்கவும் கற்பிக்கவும் ஊக்கப்படுத்துவதும் குறிப்பிடத் தகுந்தது.
4. இராபிள்ஸ் கல்வி நிலைய மாணவர்களைச் சுதந்திரமான சிந்தனையாளர்களாக, உலக அறிவு பெற்ற மாணவர்களாக மாற்றுவதும் இதன் நோக்கங்களில் ஒன்றாகும்.
5. வகுப்பு, பள்ளி ஆகிய சூழலின் எல்லையைக் கடந்து கற்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்து வதற்கும் இம்முறை கைகொடுக்கிறது.

## இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட முறை

சிங்கப்பூரின் கல்வித் திட்டத்தில், ஓராண்டு என்பது நான்கு தவணைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு தவணை என்பது பத்து வாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு தவணையின் முடிவிலும் பள்ளி விடுமுறை அளிக்கப்படும். முதல் தவணைக்குப் பின் ஒரு வார விடுமுறை அளிக்கப்படும். இந்த ஒரு வாரத்தோடு மேலும் ஒரு வாரம் இந்த இணையக் கற்றலுக்காக எங்கள் பள்ளியில் விடுமுறை அளிக்கப்படுகிறது. கொடுக்கப்படும் விடுமுறை காலத்தில் மாணவர்கள் வீட்டில் இருந்தபடியே இணை யத்தின் மூலம் பாடங்களைக் கண்டும் கேட்டும் கற்கலாம். எங்கள் பள்ளிக்காக ஏற்படுத்தப்பட்டிருக் கும் இணையத் தளத் தில் இப்பாடங்கள் இடம்பெறும்.

## தமிழும் இணையத்தில் கற்றலும்

இணையத்தில் கற்றலுக்காகத் தமிழில் கட்டுரை, மொழிப் பயிற்சி, கருத்தறிதல், இலக்கியம் போன்ற பாடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகுப்பிற்கும் மேற்கண்ட பாடங்கள் தயாரிக்கப்படும் (அவற்றைப் பின்னிணைப்பில் காண்க). முதலில் கணினியில் TCS எழுத்துருக்களால் பாடங்கள் அச்சிடப்படுகின்றன. இடையிடையே படங்களும் வண்ணங்களும் சேர்க்கப்பட்டு இப்பாடங்கள் பல்லூடகப் பாடங்களாக வடிவமைக்கப்படும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட இணையப்பாடங்களை ஒரு கணினி நிறுவனம் ‘‘செயல்திறன்மிகு எழுத்துருக்களாக’’ (dynamic fonts) மாற்றி அமைக்கும். இவ் வாறு அமைப்பதால் மாணவர்கள் தமிழ் எழுத்துருக்களைக் காண்பதில் எந்தவொரு இடையூறுகளை எதிர்கொள்ள மாட்டார்கள். மாற்றியமைக்கப்பட்ட இணையப் பக்கங்கள் யாவும் எங்கள் பள்ளியின் தலைமை கணினியில் பள்ளியின் இணைய முகவரியில் (www.ri.sch.edu.sg) இணைக்கப்படும். இவ்வாறு உருவாக்கப்பட்ட இணையப் பக்கத்தை மாணவர்கள் தங்கள் வீட்டில் இருந்தபடியே கண்டுணர முடியும். பாடங்களைக் கற்பித்தல், குறிப்புகள் வழங்குதல், பயிற்சித் தாள் அனைத்தும் கணினியின் இணையப் பக்கத்திலேயே அமைந்திருக்கும். அவற்றை மாணவர்கள் தமக்கேற்ற நேரத் தில் தமக்கேற்ற இடத்தில் அமர்ந்து கற்றிட இயலும். கற்றலில் ஏற்படும் ஐயங்களைப் போக்கிக்கொள்ள மாணவர்கள் ஆசிரியருடன் மின்னஞ்சல் மூலமாகத் தொடர்புகொள்ளலாம். இதற்கும் அவர்கள் தமிழிலேயே மின்னஞ்சல் அனுப்பலாம்.

## இணையத்தில் கற்றல் ஆய்வு

இணையத்தில் கற்றல் முதலில் 1999ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இணையத்தில் கற்றல் நடை பெற்று முடிந்த ஒரு வாரத்திற்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு இம்முறையில் உள்ள நற்பயன் களைத் தெளிவாகக் காட்டியது. இணைய வழி கற்றலை 85.4% மாணவர்கள் விரும்பினர். அது அவர்களுக்குச் சலிப்பற்ற கற்றலாக அமைந்திருந்ததாகவும் அவர்கள் கூறினர். ஆசிரியர்களும் 98.5% ஆதரித்தனர். சுயமாக கற்றல் நடைபெறுவதால் ஆர்வமும் கற்பனைத் திறனும் வளர முடியும் என்று அவர்கள் கருதினர். மற்றொரு பெரிய நன்மை, மாணவர்கள் விடுமுறையில் வெளியூரில் இருந்தாலும் இணையவழி தம் பாடங்களைத் தக்க காலத்தில் செய்து ஆசிரியருக்கு அனுப்பி வைத்தனர்.

### தமிழில் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகள்

சில சமயங்களில் தமிழ் எழுத்துருக்களைக் காண்பதில் சிரமம் ஏற்பட்டது.

தமிழ் மொழியைக் கற்பதில் ஆர்வம் ஏற்பட்டது.

பல தமிழ் இணையப் பக்கங்களைக் காண வாய்ப்பு ஏற்பட்டது.

இவ்வாறு தமிழ் இணையத் தளங்களைக் காண்பதால் மொழியில் ஆர்வம் பெருகும்.

மொழி கற்றலில் பெரும் ஆர்வம் ஏற்படுவதால் தொடர்ந்து இணையத்தில் கற்றல் நடைபெற வேண்டும்.

### முடிவுரை

இராபிள்ஸ் கல்வி நிலையத்தில் நடைபெற்றுவரும் இந்த இணையத்தில் கற்றல் முறை தொடர்ந்து 5வது ஆண்டாக நடைபெறுகிறது. இது தமிழ் மாணவர்களுக்கு மொழி கற்றலில் மிக்க ஊக்கத்தையும் ஆர்வத்தையும் அளித்து வருகிறது.